இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 36 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 30 – திங்கள்கிழமை 15 செப்டம்பர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 36 : Thiruvalluvar Year - 2056 - Aavani 30 - Monday 15 September 2025 - Chennai 16 Pages ₹ 5.00


### பொய்களைப் பரப்புவதும், களங்கம் கற்பிப்பதும்தான் பழனிசாமியின் அரசியல்! சொல்லாத வாக்குறுதிகளையும் சேர்த்து

# தி.மு.க. ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றம்!

## கிருஷ்ணகிரியில் நலத்திட்ட உதவிகள் வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

**கிருஷ்ணகிரி, செப். 15 –**

**பொய்களைப் பரப்புவதும், களங்கம் கற்பிப்பதும்தான் பழனிசாமியின் அரசியல் என்றும், சொல்லாத வாக்குறுதிகளையும் சேர்த்து தி.மு.க. ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும், கிருஷ்ணகிரியில் நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2025) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு :-

இரும்பின் தொன்மையை நிறுவ உதவிய மயிலாடும்பாறை அகழாய்வு நடந்த வரலாற்றுப் பழமையும், புகழும் கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஒரு மாபெரும் மாநாட்டைப் போல் ஏற்பாடு செய்திருக்கிறார் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் நம்முடைய அருமைச் சகோதரர் சக்கரபாணி அவர்கள். பெயரைப் போலவே இனிமையானவர் சக்கரபாணி. கொடுக்கப்பட்ட வேலையை, எடுத்த வேகத்தில் முடித்து காட்டுவதுதான் அவருடைய ஸ்டைல்!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2025) கிருஷ்ணகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், 270 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவிலான 193 முடிவற்ற பணிகளை திறந்து வைத்து, 562 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1,114 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.மதியழகன், ஓய்.பிரகாஷ், டி.ராமச்சந்திரன், மேயர் எஸ்.ஏ. சத்யா, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.தினேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நான்கரை ஆண்டில் 6 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!

கடந்த அதிமுக ஆட்சியின் 10 ஆண்டு கால நெல் கொள்முதலை விட நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் 6 இலட்சம் மெட்ரிக் டன் அதிகமாக நெல் கொள்முதல் செய்து, தொடர்ந்து தரமான அரிசி வழங்கி, இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு, 7 இலட்சத்து 33 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட, மேற்கூரையுடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் கட்டி, நெல்லைப் பாதுகாப்பாக சேமித்து வைத்து சிறப்பான பணியை நிறைவேற்றித் தந்தவர் நம்முடைய அமைச்சர் சக்கரபாணி அவர்கள். அவருக்கு என்னுடைய பாராட்டுக்கள், வாழ்த்துகள்.

அதேபோல், இந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளாக நம்முடைய அன்பிற்குரிய பிரகாஷ் அவர்களும், மதியழகன் அவர்களும், ராமச்சந்திரன் அவர்களும், அதேபோல், இங்கு அமர்ந்திருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் மிகச் சிறப்பாக செயல்படக் கூடியவர். எப்போதும் என்னை சந்திக்க வந்தாலும், அவர்கள் இந்த மாவட்டத்திற்கான கோரிக்கைகளை வழங்குவார்கள். வழங்குவது மட்டுமல்ல, அதை நிறைவேற்றிக் கொண்டுதான் செல்வார்கள்.

அதேபோல், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நான் வந்தவுடன், அமைச்சரும் சரி, மக்கள் பிரதிநிதிகளும் சரி, மாவட்டம் எப்படி இருக்கிறது என்று கேட்டவுடன் அவர்கள் ஒட்டு மொத்தமாக சொன்னது நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் அவர்கள் மிகச் சிறப்பாக செயல்படுகிறார் என்று சொன்னார்கள். அவருடைய செயல்பாடுகளுக்கு இன்று உதாரணமாக 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளே சாட்சியாக உள்ளார்கள்.

### கழக ஆட்சியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் வளர்ச்சி!

அதேபோல், அவருக்கும் மாவட்டத்தின் அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்ட வளர்ச்சிக்கான அடித்தளங்கள் எல்லாம், தி.மு.க. ஆட்சியில் போடப்பட்டது! இரண்டாம் சிப்காட் வளாகம் தொடங்கி, ஓசூர் - போச்சம்பள்ளி மின் நிலையங்கள் விஸ்வநாதபுரம் ஐ.டி. பூங்கா ஓசூரில் மின்னணு தொழில் வளாகம் என்று என்னால் மிகப் பெரிய பட்டியலையே போட முடியும்!


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்





சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

பெற்றோரை இழந்து உறவினர்கள் ஆதரவில் வாழும்
குழந்தைகளின் கல்வி மற்றும் பிற வாழ்வாதாரத் தேவைகளுக்கு
மாதந்தோறும் ரூ.2,000 வழங்கும்



அன்புக் கரங்கள் திட்டம்
தொடக்க விழா

தொடங்கி வைப்பவர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள்: 15.9.2025 திங்கள்கிழமை நேரம்: காலை 10.30 மணி
இடம்: கலைவாணர் அரங்கம், சென்னை.

எல்லார்க்கும் எல்லாம் !

செ.ம.தொ.இ/1074/வரைகலை/2025